**No.5. Kavignar Puduvai Sivam St**
**Venkata Nagar Extension**
**Pondicherry 605 011 INDIA**
Ph: (413) 2213758, 2212443, 2211592, 2210514
Fax: (413) 2212338
e-mail:motherssindia@gmail.com
msspondyoffice@gmail.com

# *The Mother's Service Society*

8.7.2012

## வெற்றிக்குச் சிறந்த வழி – ஒருங்கிணைந்த செயல்பாடும் தொலைநோக்குப் பார்வையும்

நாடு சுதந்திரம் பெற்றபின் ஏழ்மையை ஒழிக்க 5 ஆண்டு திட்டம் தீட்டினர். இலவச கல்வி அளித்தனர். ரோடு போட முயன்றனர். பல்கலைக்கழகங்கள் நிறுவினர். முப்பது ஆண்டுகளாக பலன் கண்ணுக்குத் தெரியவில்லை. 40 ஆண்டிற்குப் பின் கடைகள் அதிகரித்தன. பள்ளிகள் ஏராளமாக வந்தன. ஏற்றுமதி வளர்ந்தது. இன்று நாடு சுறுசுறுப்பாக இருக்கிறது. மக்களுக்கு சொந்த வாழ்விலும், நாட்டின் எதிர்காலத்திலும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஏழ்மை குறைந்து அழிந்துவிட்டதாக நினைக்கும் அளவுக்கு மாறுதல் உண்டு.

ஐரோப்பா, அமெரிக்காவில் 1900 ற்கு முன் ஏழ்மை இருந்தது. இன்று நம் நாடு போல் ஐரோப்பா 1900 இல் மாறியது. அமெரிக்காவில் அம்மாறுதல் 1800 இல் வந்துவிட்டது.

- படிப்பை நாடுபவன் பலனை நாள்கழித்து எதிர்பார்க்கிறான்.
- வருமானம் முழுவதும் செலவு செய்பவனுக்கு எதிர்காலமில்லை.
- நாணயத்தைக் கடைப்பிடிப்பவனுக்குப் பலன் வெகுநாள் கழித்து வரும்.
- உழைப்பவனுக்கு கைமேல் பலன்.
- முறையாக உழைப்பவனுக்கு மூன்று மடங்கு பலன்.
- நேரம், காலம், இடம், மனிதர், கடமை, பணம், பொறுப்பு, வரிசை முறை, பிறர் மனம் இனிப்பது போன்ற அனைத்தையும் ஆராய்ந்து செயல்படுபவனுக்கு அளவுகடந்த அபரிமிதமான பெரும்பலன் வரும்.
    - வக்கீல் குமாஸ்தா வக்கீல் போல சம்பாதிப்பான்
    - இஞ்ஜினியர் தேவைப்படுமிடத்தில் மேஸ்திரியைக் கூப்பிடுவார்கள்.
    - ராதாகிருஷ்ணன், சாஸ்திரி போல் மாணவன் ஆசிரியரை விட அதிக திறமையுடன் செயல்படுவான்.

இவர்கள் செயல் ஒருங்கிணைந்த செயல்பாடு – நோக்கு தொலைநோக்கு.

முகலாய ஆட்சிக்குமுன் செல்வம், நிர்வாகம், பொருள்வளம், அரசியலமைப்பு, வியாபாரம், தொழில் ஆகியவற்றில் இந்தியா உலகில் முதன்மையாக இருந்தது. அதனால் அந்நியர் படை எடுத்தனர். வலியநாடு எளிய நாட்டைத் தோற்கடித்து கொள்ளையடிப்பது 15 ஆம் நூற்றாண்டு தர்மம். அதை அதர்மம் என 20 ஆம் நூற்றாண்டு வரை உலகம் ஏற்கவில்லை. ஏற்ற நேச நாடுகளை ஏற்காத ஹிட்லர் கொள்ளையடித்தான்.

இந்த இலட்சியங்கள் நம் நாட்டில் பொதுவாக உண்டு. சிறப்பாகப் பின்பற்றப்படவில்லை. ஒருவன் பள்ளிக்குப் போய் பதினைந்து ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற்றாலும் 8 ஆம் வகுப்பு படித்தாலும், இரண்டாம் கிளாஸ் படித்தாலும் அவனுக்கு இந்த இரண்டு இலட்சியங்களும் அவனளவில் வருகிறது. அவனை ஒத்தவரை விட அவன் அதிக அளவு முன்னேறி விடுகிறான். இந்த உண்மை புரிவது எளிது. ஒருவர் எடுத்துச் சொன்னால் எளிதில் புரியும்.

தானே புரிவது மேதாவிலாசம். இதுவே மேதாவிலாசத்திற்கு

விளக்கம் எனவும் கூறலாம்.

தமிழ் நாட்டில் இலவச கல்வி, மதிய உணவு ஏற்பட்ட வரலாறு இது. கல்வி மனிதனுக்குத் தரும் இந்த இலட்சியங்களை விபரம் தெரிந்தவர் விரும்பி ஏற்றுப் பயின்றால் உடனுள்ளவர் குமாஸ்தாவாகவும் ஆசிரியராகவும், எளிய தொழிலில் ஈடுபட்டவராகவும் இருக்கும்பொழுது இவர் தொழிலதிபராக, அரசியல் தலைவராக, பிரபல எழுத்தாளராக வருவார். கடன் சுமை தாங்க முடியாதவர் இக்கருத்துகளை ஏற்றால், பயின்றால் கடன் கரையும். அன்பரானால் கடன் அன்று முதல் சேமிப்பாகும்.

வெற்றியும் சந்தோஷமும் உலகம் முழுவதும் மனித குறிக்கோளாகும். அவை உயிரின் இலட்சியமாகும். அது தாழ்ந்த உயிரின் (lower vital) இலட்சியமாகும். அதுவே இன்று நாம் உள்ள நிலையானால் அது பூர்த்தியான பின்னரே அடுத்த உயர்ந்த இலட்சியங்கள் இடம் பெறும். தாழ்ந்த இலட்சியங்களையும் உயர்ந்த முறையில் தேடலாம். உயர்ந்த முறை இருவகை:

1. பிறருக்கு வேண்டும் எனத் தேடினால் இந்த நிலையிலும் அது பரநலமாதலால் உயரும்
2. உயிரிலும் ஆன்மாவுண்டு (Spirit in the lower vital). ஆன்மா பரிணாமத்தால் அங்கு வெளிவருவதும் நல்லது.

தொலைநோக்கு எதிர்காலம் நிகழ்காலமாவது. ஒருவகையில் இது காலத்தை வெல்வதாகும். எதிர்கால இலட்சியம் ஏற்றம் தரும். மனிதன் நினைப்பதாலேயே அது பலிக்கும் என்பதால் அது விரும்பத்தக்கது. செயல்பாடு என்பது எண்ணம் உணர்ச்சி வழியாய் செயலாகி வெளிப்படுவது. ஒருங்கிணைந்த செயல்பாடு எனில் நம் செயல்கள் ஒவ்வொன்றையும் அடுத்ததுடனும், அனைத்து மற்ற செயல்களுடனும் இணைத்து உயர்த்தி ஒருங்கிணைந்ததாகச் செய்ய வேண்டும். செயல் என்பது சாதனை. எண்ணம் மனத்திற்குரியது. அது செயலாவது அந்த அளவில் சிருஷ்டி. திட்டமிட்ட செயல் வெறும்செயலை விடச் சிறந்தது. மேல்நாடுகளின் முன்னேற்றத்திற்கு திட்டம் முக்கியம். திட்டமில்லாமல் செயல்படுபவன் திட்டமிட்டு செயல்பட்டால் காலம் சுருங்கும். காரியம் சிறப்படையும். திட்டம் நம் எண்ணத்தின் குறைபாடுகளை முன்னரே வெளிப்படுத்தி விலக்கும். சூழலில் உள்ள அம்சங்கள் முடிவற்றவை. திட்டமில்லாமல் செயல்பட்டால் சூழலில் உள்ள மனிதர்களும் செயல்களும் சக்திகளும், நிகழ்ச்சிகளும் உயிர்பெற்று உபத்திரவம் தரும். திட்டமில்லாத பொழுது நாம் ஒரு செயலை ஆரம்பிக்கிறோம். அது ஆதரவற்றது. எனவே மற்ற செயல்கள் எதிர்க்கும். திட்டமில்லாத பொழுது எதிர்ப்பவை திட்டமிட்டு செயல்பட்டால் ஆதரவு தருவதாக மாறும். வீடு கட்டுபவன் எந்த திட்டமுமின்றி, முடியுமென்பதால் ஒரு மனை வாங்கினால், அங்கு ஒருவன் குடிசை போட்டுக் கொள்வான். அவனைக் கிளப்ப முடியாது. திட்டமிட்டு செய்பவனுக்கு ஊரில் உள்ள திட்டங்களெல்லாம் ஆதரவு தரும். திட்டம் திட்டத்தைக் கவரும். திட்டம் மனத்தில் எழுப்பலாம். பேப்பரில் எழுதலாம். பலரைக் கலந்து செய்யலாம். 50 வருடங்களுக்கு முன் வீடுகட்டும் திட்டம் முதன்முறையாக அமலுக்கு வந்த பொழுது சுவர்க்கமே வந்ததாக வரவேற்று கடன் விண்ணப்பித்து மூன்று வருஷத்தில் கடன் பெற்றவர் தம்மை பாக்கியசாலி எனக் கருதினார். இன்று கடன் தரும் விழாவில் போய் கடனை வாங்கிக் கொள்கின்றனர். திட்டம் திட்டத்தை ஆதரித்துக் கவர்ந்து சிறந்ததால் ஏற்பட்ட விளைவு இது. இன்றும் ஒருவர் பாஸ்போர்ட் வாங்கினாலும், கல்லூரியில் சேர்ந்தாலும், தொழில் ஆரம்பித்தாலும் நாட்டில் உள்ள வசதிகளை அறிவதில்லை. நாலு பேர் செய்வதை செய்வார்கள். நாலு பேர் உள்ள வசதிகளில் 10% அறிவர். திட்டமின்றி செயல்படுபவருக்கு அதிலும் குறைவாய்க் கிடைக்கும். தெளிவான திட்டம் வகுத்து நிதானமாக ஒருவர் செயல்பட்டால், 16% வட்டிக்கு ஒன்பது கோடி பாங்க் கடன் பெற்றவர் தனக்கு 6% வட்டியில் கடன் கிடைக்கும், முதலிரண்டு ஆண்டு கழித்து திருப்பித் தரலாம், 20 ஆண்டு தவணை, 30 கோடி கிடைக்கும் என அறிகிறார். பெறுகிறார். திட்டம் உள்ள வசதிகளைத் தெரிவிக்கும். மத்திய மந்திரி புதுவை வந்தால் நண்பர் வீட்டில் தங்குவார். நண்பர் தொழிலில் அக்கரை உள்ளவரில்லை. மந்திரி நண்பர். ஒரு முறை தொழில் செய்ய முடிவு செய்து ஒன்றரை கோடியில் ஒரு தொழில் ஆரம்பிக்க நினைக்கிறேன். உங்கள் உதவி வேண்டும் என மந்திரியைக் கேட்டார். அவர் திகைத்தார். 150 கோடியே குறைந்தபட்ச தொழில். ஒன்றரை கோடி என கேள்விப்பட்டதில்லையே. 150 கோடியில் ஆரம்பித்தால் உதவுகிறேன் என்றார். புதுவைக்கும் டெல்லிக்கும் தகவல் விஷயத்தில் உள்ள வித்தியாசமிது. ஸ்ரீ கர்மயோகியின் நெடுநாளைய அனுபவம்: திட்டமிட்டு ஒருங்கிணைத்து சமர்ப்பணம் செய்து 10 ஆண்டில் 1000 கோடி தொழில் செய்ய ஒருவர் ஆரம்பித்தால் அது

ஓரிரு ஆண்டில் 150 கோடியில்

மூன்று மடங்காக முடியும் என்பது ஸ்ரீ கர்மயோகியின் அனுபவம்.

அன்னை சூழல் இதன் சாரத்தைக் கேட்காமல் தருகிறது. அன்னை அன்பர் முறையாக செயல்பட்டால் சமர்ப்பணத்தை மேற்கொண்டால் திட்டத்தினைக் கைக்கொண்டால், இணைந்து செயல்பட்டால் எந்த அன்பரும் இன்று எந்த காரியத்தையும் முடிக்கலாம் என்பது அன்பர்கள் அன்றாடம் காண்பது. திட்டம் மூன்று அளவில் உண்டு. முதல்நிலைத் திட்டம் பொருள்களைச் சேர்ப்பது. இரண்டாம் நிலைத்திட்டம் நண்பர்களைச் சேர்ப்பது. மூன்றாம் நிலைத் திட்டம் எண்ணங்களைச் சேர்ப்பது. இங்கு நாம் பேசுவது முதல் நிலைத்திட்டம் திட்டம் என்பதைக் கருதாமல் செயல்படும் இஞ்ஜினியர் தம் தொழிலில் உற்பத்தி செய்ய முடியவில்லை. உற்பத்திக்குப் பணமில்லை. கடன்காரன் தொல்லை உயிர் போகிறது. கரண்ட் இல்லை. வேலை தெரிந்தவர் சம்பளம் பாக்கியானதால் போய் விடுகின்றனர் என அளவுகடந்து சிரமப்பட்ட நேரம், (attitude) மனப்போக்கு வாழ்வை நிர்ணயிக்கும் என்பதை அறிந்து போக்கை மாற்ற முடிவு செய்து உள்ள கரண்டை முழுவதும் பயன்படுத்தினார். Powercut விலகியது. கடன்காரருக்குப் பயப்படக் கூடாது என முடிவு செய்தவுடன் ஒரு நாளைக்கு 70 போன் கால் வருமிடத்தில் மூன்று நாட்களாக எவரும் கடன் கேட்கவில்லை. உள்ளதை முழுவதும் பயன்படுத்துவது முதற்கடமை என்று செயல்பட்ட பொழுது மாதம் பத்து இலட்சம் ஆர்டர் தர பத்து பேர் முன்வந்தனர். அது போன்ற முப்பது வாய்ப்புகளுண்டு எனக் கண்டார்.

மனநிலை(attitude) மாறுவது

உணர்வைத் திட்டமிட்டு செயல்படுத்துவது.

வெற்றி பல நிலைகளில் உண்டு.

1. செய்த வேலை பலன் தருவது முதல் நிலை. சக்தி (தெம்பு) இருந்தால் பொதுவாக இந்த பலன் வரும்.
2. பலன் வருவதுடன் செய்த வேலையால் அனுபவம் வருவது அடுத்த நிலை. தெம்பு அளவு கடந்திருந்தால் அனுபவமும் வரும்.
3. அனுபவம் மூலம் அறிவு வரும்.
   மனம் வளர்ந்திருந்தால் அனுபவம் அறிவாக மாறும்.
4. இந்த வேலை பலன் தருவதால் இதே போன்ற அடுத்த வேலை பலன் தரும்.
   இது அதே அளவில் (horizontal plane) வளரும் அறிகுறி.
5. அடுத்த வேலை அடுத்த உயர்ந்த கட்டத்தில் முடியும்.
   அது நடப்பது தெம்பு (சக்தி) உறுதியாக இருப்பதாகப் பொருள்
   (Energy becomes force directed by will)

மனிதன் செயல்படும்பொழுது சக்தியிருக்கும். உற்சாகமிருந்தால் உற்சாகம் சக்தியை ஆதரிக்கும். உறுதியிருந்தால் தெம்பு force ஆக மாறும். பலன் அதிகமாகும். தெளிவான மனிதனானால் force power ஆக மாறும். இவை horizontal, vertical ஆக வளறும். தெம்பு தரம் குறைவானதானால் அல்லது அபரிமிதமாக இருந்தால் வளர்ச்சி அதே அளவிலிருக்கும். தெம்பின் தரம் உயர்வானதானால் வளர்ச்சி vertical ஆக அடுத்தடுத்த உயர்ந்த கட்டங்களுக்குப் போகும்.

திட்டமிட்டு செயல்பட்டால், நாம் எந்த நிலையிலிருந்தாலும் அதே அளவில் பெருகும். ஒரு கடையுள்ளவன் திட்டமிட்டு செயல்பட்டால் பல கடைகளை ஆரம்பிப்பான். இது அதே நிலையில் உள்ள வளர்ச்சி. ஒரு கடையுள்ளவன் தியேட்டர் கட்டுவது அடுத்த கட்ட வளர்ச்சி vertical expansion. இணைந்து செயல்பட்டால் (organised) சக்தியின் தரம் உயரும். ஒருங்கிணைந்து செயல்பட்டால் (integrated) ஒரு நிலையிலிருந்து பல கட்டங்கள் உயர்வான். கடை நடத்துபவன்(industry) தொழிலாரம்பிப்பான். அவனே அன்பரானால் பெரிய தொழிலாரம்பிப்பான். மெடிக்கல் காலேஜ் கட்டுவான். தொலைநோக்கு உள்ளூருக்கு உரியதாகவோ, தொழிலுக்குரியதாகவோ, தமிழ்நாட்டிற்குரியதாகவோ, இந்தியாவுக்குரியதாகவோ இருந்தால் பெருகுவது சக்தியின் ஆதரவு உள்ளவரை அந்த அளவில் பெருகும்.

- பலன், வெற்றி பல நிலைகளிலுண்டு.
- பலனின் தரம், அளவு பலநிலைகளில் உண்டு.
- பில் கேட்ஸ் ஒருவகை. அம்பானி ஒருவகை.
- மந்திரிக்கு வேலை போய்விட்டது. சாப்பாட்டுக்கு வழியில்லை. யாரிடம் போய் ஆலோசனை கேட்கலாம் என புதுவை வந்து ஒரு அன்பரைக் கேட்டார். இது 1990 இல். இன்று அவர்

ஆரம்பித்த ஸ்தாபனம் நாட்டில் முதல் பத்து ராங்கில் வந்துள்ளது. சொத்து 3000 கோடியாகப் பெருகியது. மனிதன் அரசியல்வாதி. அடிப்படை சிரமம் வந்தாலும், அரசியல் பின்னணி பெரிய ஆதரவு. அவர் கல்வித்துறையைத் தேர்ந்தெடுத்தார். கல்வி நாட்டில் பெருகும் துறை. தரம் (Standard) ஸ்தாபனத்தை உயர்த்தும். தரமான ஸ்தாபனமாக்கினார். நாட்டு நிலைமை, அவருடைய பின்னணி, முயற்சி, துறை, தரம் பலனை நிர்ணயிக்கிறது.

- வெற்றிக்கு உழைப்பு காரணம்.
- உழைப்பு வெற்றி பெற நோக்கம் காரணம்.
- தொலைநோக்கு பெரும் வெற்றி தரும்.
- ஒருங்கிணைந்த செயல்பாடு அந்த அளவிலிருந்தால் பலன் அந்த அளவில் வரும்.
- முனைபவர் அன்பரானால் பலன் அனந்தம், வெற்றி அனந்தம், தரம் அனந்தம்.

பரம்பரையாக மனிதன் வசதியாக, சந்தோஷமாக, தர்ம நியாயத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தவன். மொகலாய ஆட்சி, ஆங்கிலேயருடைய ஆட்சி வந்து குறுநில மாநிலங்களை ஒன்றுபடுத்த முயன்ற பொழுது, கிராமம் தன் சுதந்திரத்தை இழந்தது. மொகலாயர் வருமுன் கிராமம் பஞ்சாயத்தாக இருந்தது. பஞ்சாயத்து என்பது தர்ம நியாயத்திற்குக் கட்டுப்பட்டது. இந்துமத கோட்பாடுகளின்படி – எவரும் எந்த தெய்வத்தையும் வணங்கலாம் என்ற சுதந்திரத்துடன் – வாழ்ந்தபொழுது மக்கள் வாழ்வும் உணர்வும் அறிவும் இயற்கையோடு ஒன்றியிருந்ததால் மாதம் மும்மாரி பொழிய வளமான வாழ்வு சுதந்திரமாக இருந்தது. இந்துமதம் பௌத்தம், ஜைனம், சிவம் (சைவம்), சாக்தம், வைஷ்ணவம், கௌமாரம், கணபத்தியம் என வெவ்வேறு கடவுள்களை – பிரம்மா, விஷ்ணு, சிவன், கணபதி, முருகன் – வணங்க சமூகத்திற்கு உரிமையளித்தது.

எந்தக் கடவுளையும் எவரும் வழிபட சுதந்திரம் உண்டு.

எந்தக் கடவுளை வழிபட்டாலும் தர்மம் நியாயமுண்டு.

கடவுள் வழிபாடு அடிப்படை. நடைமுறை தர்மம், நியாயம். வேதம் வைதீகமாயிற்று. உபநிஷதம் இந்துமதமாயிற்று. பௌத்தம் பிறந்து வளர்ந்தது. பௌத்தமும் ஜைனமும் சமணர்களை வழங்கின. சைவமும் ஜைனமும் போட்டியிட்டதால் சைவம் தழைத்து 63 நாயன்மார்கள் அவதரித்தனர். சைவத்தைக் கடந்த வைஷ்ணவம் வந்து 12 ஆழ்வார்கள் அவதரித்தனர். இவை ஆயிரமாண்டுகளாக இருந்த வரை, வளம், சுபிட்சம், ராஜ்யம், அமைதி, போர், சமாதானம் போன்றவை எழுந்து வளர்ந்தாலும் முகலாயர் வரும்வரை மதவழிபாட்டின் சுதந்திரம் குறையவில்லை. ஆங்கிலேயனும் கிருத்துவ மதத்தைப் பரப்பினாலும் அடிப்படை அசையவில்லை. அடிப்படை இந்தியா ஒன்று. இந்த அந்நியர் செய்த வேலைகள் கிராமத்தின் சுபிட்சத்தை தர்மநியாயத்தைக் குலைத்து விட்டதால் வளமை போய் ஏழ்மை வந்தது. தர்மம் போய் அதர்மம் வந்தது. நியாயம் அழிந்து அநியாயம் எழுந்தது.

நாட்டின் திறமை, செழிப்பு, நிர்வாகம், வளம், சத்தியம் அழிந்து பூமி ஒன்றாகியது.

நாடு-மண் ஒன்றாக செய்த தியாகமிது. வேதகாலத்திலிருந்து இன்று வரை ஆன்மிகம் பெற்ற சுதந்திரம் முழுமையானது. தவமும், யோகமும் எந்த கட்டுப்பாட்டிற்குள்ளும் வரவில்லை. முக்கியமாக ஜாதி கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை. நந்தனும், கண்ணப்பனும், திருப்பாணனும் யோகப்பாதையில் போவது ஜாதிமதங்கட்குட்படாதது. மகாபாரதமும், இராமாயணமும் நாட்டு வாழ்வை ஏற்று நடத்தின. இராமன் க்ஷத்திரியன். அதனால் க்ஷத்திரியனுக்கோ, அவன் ஜாதிக்கோ உயர்வு வரவில்லை. கிருஷ்ணன் இடையன். கிருஷ்ணன் அவதாரம் என ஏற்று வழிபட்டாலும் இடைச்சாதி இடைச்சாதியாகவே இருந்து விட்டது. ஜாதியின் பிடிப்பு ஆழ்ந்தது. முகம்மதிய மதத்தைத் தழுவியவரும் கிருத்துவ மதத்தைத் தழுவியவரும் ஜாதியை, கர்மத்தை, சுப முகூர்த்தத்தை, தாலியைக் கைவிடவில்லை. ஜாதியின் ஆதிக்கம் ஆழ்ந்தது. ஆரம்ப நாளில் ஆன்மிகம் வாழ்க்கைப் பொக்கிஷமான பொழுது அதை ஏற்றுக் காப்பாற்றிய அரண் ஜாதி. அது ஜாதியின் பெருமை. தீண்டாமை நாட்டில் ஏற்பட்டது ஜாதியாலல்ல. சமூகத்துள் இருக்க முடியாமல் ஊரை விட்டுப் போனவர்கள் சண்டாளராகி, ஊருக்கு வெளியே தங்கி கூலி வேலை செய்து வாழ்ந்து தீண்டாதவராகி விட்டனர். ஆங்கிலேயப் பள்ளி, சர்க்கார், ரயில் வந்து பேதத்தை சற்று குறைத்தது. ஆனால் கல்வி பிராமணனுக்கும், வீரம் க்ஷத்திரியனுக்கும், செல்வம் வைஸ்யனுக்கும், சேவை சூத்திரனுக்கும் என்ற ஜாதி அடிப்படை பாகுபாடு நின்று நிலைத்தது. நாடு ஒன்றுபட சத்தியத்தையும், சுபிட்சத்தையும் தியாகம் செய்த நிலையில் சிந்திக்கும் திறன் அழிந்தது. மூட நம்பிக்கைகள் எந்த காலத்திற்கும் எந்த மதத்திற்கும் எந்த சர்க்காருக்கும் உரியது. சமூகம் கட்டழிய ஆரம்பித்தவுடன் மக்கள் மூட நம்பிக்கைகளை வலுவாகப் பின்பற்றினர். அதனால் ஏற்கனவே அழிந்த சுபிட்சம் நிரந்தர வறுமையாகி, தன்னம்பிக்கை மூட நம்பிக்கையாகி, பொய்யும் புனைசுருட்டும் புரிந்து,

ஏற்கனவே சுதந்திரமற்றவர் – தீண்டாதவர், பெண்கள், ஏழைகள் – மேலும் கொடுமைப்படுத்தப்பட்டனர். கொடுமை செய்வது உரிமையாகி, அதுவே இலட்சியமாயிற்று. இன்று ஆங்கிலேயன் போனாலும் அமெரிக்க நாகரிகம் நாட்டை ஆக்ரமித்திருப்பதால் செய்வதறியாது மக்கள் திகைக்கும் பொழுது, மேல்நாட்டு வாழ்க்கை முறை அமுலாகி அதைச் சரிவர பின்பற்ற முடியாமல், சொந்தமான பெருவாழ்வு செல்வாக்கிழந்து மறந்து விட்டதால் பொதுவாக மக்கள் தன்னம்பிக்கை முழுவதையும் இழந்து, எதையும் சர்க்கார் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கும் நிலையுள்ளது. மின்சாரம், காஸ், ரோடு, கல்வி சர்க்கார் மட்டும் செய்ய முடியும் என்பதால் நம்பிக்கை மாறி நம்பிக்கையற்ற நிலை – சர்க்காரை எதிர்பார்க்கும் மனப்பான்மை—நிலவுகிறது.

நம் நாட்டில் திருமணம், திருவிழா, அறுவடை என்பவை பரம்பரையானவை. அவற்றுள் குறை, தவறு வருவதேயில்லை. மேல்நாட்டார் இவற்றைக் கண்டு ஒரே குழப்பமாயிருக்கிறது. என்ன நடக்கிறது. ஏன் எனப் புரியவில்லை. ஆனால் முடிவில் எல்லாம் சரியாக இருக்கும் என்கிறார்கள். அவர்கள் செய்யும் வேலை திட்டமிட்டு நடப்பதால் காண்பவருக்குப் புரியும். நாம் திட்டமிடுவதில்லை. திட்டம் மனதிலிருக்கும். காரியம் நடந்தபடியிருக்கும். குறை வராது. குறையே வராது. நாம் தொழிலாரம்பித்தால் அதற்குரிய திட்டத்தைப் பின்பற்றுவதில்லை. பலன் பாதிக்கும். குறைவாக வரும். சில சமயங்களில் பலனே வராது. பள்ளிகள் 14 வருஷம் கற்றுக் கொடுத்து பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதில்லை. ஏனெனில் அவர்கள் முறை நாமறியாதது.

இச்சொற்பொழிவின் தலைப்பு அவர்கள் நாட்டுமுறை. நம் நாட்டில் அவர்கள் முறையைப் பின்பற்ற நாம் அதை நேரடியாகப் பின்பற்றாமல் அவர்கள் முறையும், நம் திறமையும் இணையுமிடத்தில் ஆரம்பித்து செய்தால் உப்பு சத்தியாகிரஹம் பெற்றதுபோல் வெற்றி பெறலாம். 1967 இல் நடந்த election இல் தந்த வெற்றி இக்காரணத்தால். Election மேல்நாட்டு முறை. உணர்ச்சி நம் நாட்டுச் சிறப்பு. தமிழ் மேடைப் பேச்சு இரண்டையும் இணைத்ததால் ஆளும் கட்சி அடியோடு தோற்று, எதிர்கட்சி பெருவாரியாக வெற்றி பெற்றது. எதிர்காலம் இந்தியாவுக்கு சிறப்பானது. நாட்டுத் தலைமை திட்டங்களை மேல்நாட்டு முறையில் நிறைவேற்றாமல்

நம் நாட்டுமுறையில் நம் நாட்டுத் தேவையை

நம் நாட்டுத் திட்டமாக நிறைவேற்றினால்,

பலன் ஏராளமாக வரும். பருத்தி புடவையாகக் காய்க்கும். இத்தலைப்பை அது போல் அமைப்பது சிறந்தது. பவர் கட் வரும் பொழுது நாம் ஜெனரேட்டர் வைக்கிறோம். நம் நாட்டு முறை என்ன? மின்சாரம் தெய்வீகமானது. நேரடி தெய்வம். நிதர்சனமான தெய்வம். தெய்வமும் குழந்தையும் கொண்டாடுமிடத்தில் கரண்ட் வரும் பொழுது கவனமாக ஒரு நிமிஷம் கூட விரயமாகாமல் பயன்படுத்தினால் அன்றே பவர்கட் மாயமாய் மறையும்.

நம் நாட்டு முறைகளின் தத்துவம்:

1. பொருள்கள் தெய்வம்
2. சக்தி (மின்சாரம்) தெய்வம்
3. தொழில் தெய்வம்
4. தெய்வம் தொழுதால் பதில் கூறும்.
5. மழை வேண்டுமானால் வேலையைக் கவனமாக செய்தால் மழை தவறாது பெய்யும்.
6. பணம் தெய்வம். அதைப் பாராட்டினால் ஏராளமாக வரும்.
   பணம் செலவானால் அதிகமாக வரும்.
   அதிகமாக செலவானால் ஏராளமாக வரும்.
7. வேலையில் குறை ஏற்பட்டால் அதை சரி செய்வதை விட நம் மனக்குறையை சரி செய்தால் வேலை சரியாகும்.
8. வெற்றிக்கு வழி முறையான உழைப்பு.
9. திட்டமிட்ட வேலை மேல்நாட்டிற்குரியது.
10. சூட்சுமமான திட்டம் நமக்குரியது
11. சூட்சும திட்டம் காலம், இடம், பொருள், முயற்சியை சுருக்கி சிறு முயற்சிக்குப் பெரும்பலன் தரும்.

Election இல் இம்முறையைப் பயன்படுத்தினால் வேட்பாளர் பதவியை நாடாவிட்டால், பதவி வேட்பாளரை நாடும். ஏக மனதாக எதிர்ப்பில்லாமல், முயற்சியின்றி தேர்ந்தெடுக்கப்படுவார். இன்று உலகம் பெரிய

நெருக்கடியில் உள்ளது. அது பொருளாதார நெருக்கடி. இந்திய நாட்டு முறை அதை க்ஷணத்தில் விலக்கும். அதன் சாயலை மெக்கின்சி அறிந்து அதன்படி இந்தியா 48 பில்லியன் டாலரும் சைனா 350 மில்லியன் டாலரும் பெறலாம் என்றனர். அவை பெரும் தொகைகள். இந்திய நாட்டு ஏழ்மை ஒரே ஆண்டில் அழிக்கப்படும். நாம் நம் முறையைப் பின்பற்ற வேண்டும். தற்சமயம் இதுவுமன்றி, அதுவுமின்றி நாம் ஏழை நாடாக இருக்கிறோம். 400 ரூபாய் தினக்கூலி உள்ளது. அத்திட்டப்படி 4000 ரூபாய் தினக்கூலி கொடுத்தால் பணம் தானே வரும்.

அன்னையை அறிந்தபின் அன்பர் வாழ்வு அபரிமிதமாக வளர்ந்தது. அது வளர்ந்த முறை இதுவே. எங்கிருந்தோம், எப்படி இங்கு வந்தோம் என யோசனை செய்தால் விளங்கும். விளங்கினாலும் விளங்காவிட்டாலும் பலன் வரும். பலன் வந்தபின் எளிதில் புரியும்.

- ஏழ்மை ஓராண்டில் அழியும்
- அறியாமை சில ஆண்டுகளில் மறையும்
- நோய் இருந்த இடம் தெரியாது

மஞ்சள் காமாலைக்கு சிறந்த மருந்து எளிய முறையில் செயல்பட்டு குணப்படுத்துவதை அறியாமல் ஆஸ்பத்திரிக்குப் போய் பெரும் செலவு செய்து நெடுநாள் கழித்து குணமாவதும், குணமாகாததும் இன்று நம் மக்கள் நிலை.

The Life Divine புரியாத நூல் எனப் பெயர் வாங்கியது. நாம் நூலை எடுத்துப் படிக்கிறோம். சிரமமாக இருக்கிறது. புரியவில்லை என்கிறோம். நம் முறை என்ன?

நூலின் மையக்கருத்தை மாணவர்க்குச் சொன்னால்
அதன் அமைப்பை விளக்கினால்
சிக்கலான முடிச்சுகளை முதலிலேயே அவிழ்த்துவிட்டு
பிறகு நூலைப்படித்தால்
புரியாத இடமே இருக்காது

ஆங்கில முறைப்படியோ, மரபையொட்டி மனப்பாடம் செய்தோ பயின்றால் எதுவும் புரியாது.

- எது புரிந்தால் அனைத்தும் புரியுமோ அது பிரம்மம் என்பது உபநிஷதம்.

மரபு ஆத்மா மோட்சம் பெறுதலை நாடுகிறது. வாழ்க்கை சரணாகதியால் திருவுருமாறி பரிணாமத்தால் அஞ்ஞானம் ஞானமாகி, ஞானம் ஆன்மாவாவது நூலின் மையக் கருத்து. இது நூலில் எழுதப்பட்டுள்ளது. முதல் பாகம் 28 அத்தியாயம் சிருஷ்டி. இரண்டாம் புத்தகம் இருபாகங்களாலானது. முதல் பாகம் 14 அத்தியாயம் அஞ்ஞானம் ஞானமாவது. இரண்டாம் பாகம் 14 அத்தியாயம். ஞானம் பரிணாமத்தால் ஆன்மாவாவது.

முறை முறையானதானால் முழுவதும் புரியும்.

எளிமையாகப் புரியும்.

இந்த அடிப்படையில் எழுதப்பட்ட நூல் சீக்கிரம் அச்சுக்குப் போகிறது. அது வெளிவரும் பொழுது அன்பர்கள் The Life Divine புரிகிறது எனக் காண்பார்கள்.

நோக்கு – தொலைநோக்காக இருக்க வேண்டும்.

நூல் புரிவது யோகப் பலன் பெறுவதற்காக என்ற நோக்கம் தொலைநோக்கு.

முறை – ஒருங்கிணைந்தது

முடிச்சுகளை முன்னமே அவிழ்த்து, எது எந்த இடத்தில் எப்படி எதனுடன் இணைய வேண்டும் எனக் கண்டு இணைந்த திட்டம் படி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சுமார் பத்து வால்யூமாவது எழுதினால் தான் நூலில் 1070 பக்கங்களிலுள்ள 56 அத்தியாயங்களும் முடியும். அறிமுகமான கருத்துகள் 400 பக்கம் அளவில் முதல் வால்யூமாக வரும்.

The Life Divine புரிந்தால் எதுவும் புரியும்.

- ஸ்ரீ கர்மயோகி அவர்கள்